**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.29/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருணாகரன் | மதம் | : இந்து |
| த/பெ | : சஞ்சீவி | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : நல்லாட்டூர் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.04.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. நான் என் மனைவி இருக்கும்போது தியாகராஜனுக்கு வேறு சொத்து விற்றுள்ளேனா என்றால் என் மனைவி இருந்தபோது விற்றுள்ளேன். நான் விற்றதாக சொல்லும் புல எண்.139/12, 139/13 ல் 24 செண்ட் நிலம் விற்றதற்கான கிரைய ஆவணம் புகைப்பட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். 30.05.2016ல் நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 30.05.2016ம் தேதியிட்ட கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் எனக்கு தெரியவில்லை.

9. என் மனைவி இறந்த போது மன உளைச்சால் வீட்டை விட்டு சென்றதாக சொல்வதில் அந்த சமயம் நான் எங்கு இருந்தேன் என்றால் வீட்டில்தான் இருந்தேன். என்னிடம் வங்கியில் அடமானத்திற்காக கையெழுத்து பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. ஜாமீன் கையெழுத்து பெற்றதாக சொல்லியுள்ளேன். நான் சாட்சி கையெழுத்திட்டேனா அல்லது ஜாமீன் கையெழுத்திட்டேனா என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. ஏதோ என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். அவ்வாறு எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் 2, 3 இடம் காட்டினார். நான் கையெழுத்து செய்தேன்.

10. என்னிடம் காட்டப்படும் 06.12.2018ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னுடைய கையெழுத்தைபோல்

அவர்கள் போட்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் 06.12.2018 ம் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ளது யார் என்றால் நான்தான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 06.12.2018 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள புகைப்படம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த புகைப்படத்தின் அருகில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் எனக்கு சந்தேகமாக உள்ளது.

11. 06.12.2018 ம் தேதியிட்ட ஆவணத்தில் மொத்தம் 16 இடங்களில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் 2, 3 இடங்களில்தான் கையெழுத்து செய்துள்ளேன். அந்த சமயம் என் மனைவி இறந்ததால் நான் மன நல பாதிப்பில் இருந்தேன். நான் மனநல பாதிக்கப்பட்டு இருந்ததாக கூறுவதற்கு ஆதரவாக என்னிடம் மருத்துவ சான்று எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் 2, 3 இடங்களில்தான் செய்த கையெழுத்தும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து செய்ததா என்றால் ஒரு அறைக்குள் அழைத்து சென்றார்கள். அது என்ன இடம் என்று தெரியவில்லை. 2014 ல் 24 செண்ட் விற்பதற்கு முன்பு நான் கிரைய ஒப்பந்தம் செய்தேனா என்றால் நான் கிரைய ஒப்பந்தம் செய்யவில்லை. 2015 லேயே என் மனைவி இறந்துவிட்டார் என்றாலும் 2015 ல் இருந்து 3 ஆண்டுகள் மன உளைச்சலில் இருந்ததாக எந்த ஆவணமும் இல்லாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

12. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள புகைப்படம் என்னுடையது என்றால் எனக்கு தற்போது ஞாபகம் எதுவும் தெரியவில்லை. எனக்கு என் மனைவி இறந்த பின்பு உண்மையிலேயே மன நலம் பாதிக்கப்பட்டிருந்தால் 2016 ல் நான் 24 செண்ட் பி.வா.சா.ஆ 2 ன்படி கிரையம் எழுதி கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் நான் விற்கவேயில்லை. வழக்கு சொத்தில் உள்ள கிரைய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால் நான் விற்கவும் இல்லை. யாரும் சாட்சி கையெழுத்து செய்யவும் இல்லை. 06.12.2018 ல் நான் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால் எனக்கு கடன் இருக்கிறது. சிறிது பணம் கொடு என்றுதான் கேட்டேன். விற்பனை சாட்சி கையெழுத்து பற்றி எனக்கு தெரியாது.

13. அவ்வாறு நான் கேட்டதன் பேரில் பிரதிவாதி எனக்கு பணம் கொடுத்தாரா என்றால் முதலில் சொத்தை விற்றேன். 2 வதாக கிரையம் எதுவும் கொடுக்கவில்லை.

பணமும் வாங்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 10ல் **"நான் கிரையம் கொடுத்ததாக சொல்லும் கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் கிடையாது**" என்றும் பத்தி 11ல் **" முதல் பிரதிவாதிக்கு நான் கிரைய பத்திரம் எழுதி கொடுத்தாக சொல்லும் போலி ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ள சாட்சிகள் அத்திமஞ்சாரிபேட்டை சேர்ந்த லோகேஷ் மற்றும் திருத்தணி நேரு நகரை சேர்ந்த ராஜேஷ். இருவரும் எனக்கு யார் என்றே தெரியாது."** என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

14. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்ற போது சார்பதிவாளர் என்னிடம் நான் சொத்தை பிரதிவாதிக்கு விற்கிறேனா பணம் வாங்கி கொண்டேனா என கேட்டாரா என்றால் நான் உள்ளே போகவும் இல்லை. என்னிடம் கேட்கவும் இல்லை. சொத்து மதிப்பு தற்போது அதிகமானதால் ஏற்கனவே விற்ற சொத்தை பொருத்து எனது மகன்கள் பேச்சை கேட்டுகொண்டு பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சொத்தை விற்கவேயில்லை. நான் என் மனைவி இறந்த பின்பு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு பண்ணுரில் அந்த பெண்ணுடன் குடியேறிவிட்டேன் என்றால் அப்படி நடக்கவேயில்லை.

15. நான் என் மனைவிக்காக ஏற்பட்ட கடனுக்காக வழக்கு சொத்தை விற்பனை செய்துவிட்டேன் என்றாலும் அந்த விற்பனை என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் நான் கடன் வாங்கவில்லை. அந்த கிரைய ஆவணம் சட்டப்படியானது என்றாலும் அதை ரத்து செய்ய கோரி நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)